**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்திட்டம் - 2022**

---

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைசாத்திடப்பட்ட 2021 யூன் 10 ஆம் திகதிய 2000003227 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2000003226 ஆம் இலக்க மானியத்தின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் எஸ்ஏஆர்பி இற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ அலகு அமுலாக்கல் முகவராகவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் உள்ள 40,000 கிராமப்புற சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் மீட்சி மற்றும் சந்தைப் பங்குபற்றலை கட்டியெழுப்புவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் காலநிலை மீட்சி மற்றும் உள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலிகளுக்கான திறன் மேம்பாடு, காலநிலை மீட்சி மற்றும் உள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலிகளுக்கான முதலீடு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகிய மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,954 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 55.3 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,686 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 42.7 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,268 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச் செயற்திட்டம் 2021 யூன் 10 இல் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியிருந்ததுடன் 2027 யூன் 10 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | வாசி குயிக் கப்ஸில் இருந்து வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு 2022 திசெம்பர் 01 இல் செயற்திட்டம் உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளது, அதன் பிரகாரம் 2022 திசெம்பரில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வாடகைக் கட்டணம் அட்டுறுவாக குறிப்பிடப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | 2.2 | இணங்கப்பட்டது, அடுத்த வருடத்தில் இருந்து சீர்செய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் பேணப்பட வேண்டும். |
| (ii) | கணக்காய்வின் போது, பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பல உறுதிச்சீட்டு இலக்கங்கள் அச்சிடப்பட்ட உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களுடன் பொருந்தாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | - | இணங்கப்பட்டது. இது கணக்கீட்டு மென்பொருளின் தனிப்பயனாக்கம் (customization) காரணமாகும், மேலும் இது சீர்செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டது. | உறுதிச்சீட்டுக்களைத் தயாரிக்கும் போது எண்கணித சரியானதன்மையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 1/2022 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட செயற்திட்ட காலப்பகுதி மற்றும் ஐ.அ.டொலர் 05 மில்லியனிற்கு மேற்பட்ட மொத்தக் கிரயத்துடன் கூடிய செயற்திட்டங்களுக்கு உள்ளகக் | தொடக்கத்தில் PMU ஆனது, விவசாய அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படும் SAPP ஒரு சகோதர செயற்திட்டமாக இருப்பதால், IFAD இன் இணக்கப்பாட்டுடன், சிறுநிலவுடமையாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் (SAPP) உள்ளக கணக்காய்வாளரின் | முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் தகுதியான உள்ளகக் கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் இதுவரை உள்ளகக் கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை நாடியது. எனினும் விவசாய அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளருக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு MSD இடமிருந்து மீண்டும் கோருவோம். | |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 5 மில்லியன் பெறுமதியான கணக்கீட்டு மென்பொருளை நிறுவுவதற்கு சொப்ற் விஷன் ரெக்னோலஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு 2022 ஒக்தோபர் 10 இல் கொள்வனவுக் கட்டளையொன்று (PO) வழங்கப்பட்டிருந்தது. PO இன் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் மென்பொருளை நிறுவுவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் 2022 ஒக்தோபர் 10 இலிருந்து 26 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2023 யூன் 27 இற்குள் நிறுவுதல் செயன்முறை இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது, கணக்கீட்டு மென்பொருளின் தனிப்பயனாக்கம் இன்னும் தொடர்கிறதால் இது ஏற்பட்டதுடன் ஒப்பந்தத் தொகையில் 75 சதவீதம் PMU ஆல் இன்றளவில் செலுத்தப்படுகிறது. | கணக்கீட்டு மென்பொருள் உடனடியாக நிறுவப்பட வேண்டும். |

### 3.2 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2019 நவம்பர் 04 இல் வெளியிடப்பட்ட செயற்திட்ட வடிவமைப்பு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை 2020 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது, எனினும் நிதி உடன்படிக்கை 2021 யூன் 10 இல் கைச்சாத்திடப்பட்டது, மேலும் இந்த செயற்திட்டத்தின் காலப்பகுதி 06 ஆண்டுகள் ஆகும். எனினும், இந்த செயற்திட்டம் 2022 ஆகஸ்ட் முதல் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதி உடன்படிக்கையின் பின்னர் ஒரு வருடத்திற்கும் மேலாக செயற்திட்டம் செயற்பாடற்ற நிலையில் இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | நிதி உடன்படிக்கையின் பொதுவான நிபந்தனைகளின் கீழ் பட்டியல் I இன் 7.2 ஆம் பந்தி மற்றும் VII இன் 7.13 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகிய இரண்டிற்கும் முக்கிய செயற்திட்ட ஆளணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வப்போது செய்யப்படும் கோரிக்கைகள் மற்றும் நினைவூட்டல்களைப் பொருட்படுத்தாமல், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட பதவியணி பதவிநிலைகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு அதிக காலம் எடுத்தது. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் கால எல்லைக்குள் இருக்க வேண்டும். |